## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : STC No. 264/2017 | **Date** | : 09.06.2025 |
| **Deposition of Witness for** | : அ.சா.1 | **Taluk** | : |
| **Name** | : வரதராஜன் | **Calling** | : |
| **Father Name** | : கைலாசம் | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.06.2025**

(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர் ).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் ஈரோடு காளிங்கராயன்பாளையம் எலவமலை பெரியார் நகரில் குடியிருந்து டபுலிங் மில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 26.09.2015ம் தேதி மாலை 04.00 - 4.30 மணியளவில் கே.கே நகரை சேர்ந்த கலைமணி என்பவர் பாலாஜி என்பருக்கு சொந்தமான குடோனில் இருக்கும் கலைமணியின் இயந்திரத்தை சுத்தம் செய்வதற்காக என்னை அழைத்துச்சென்றார். நானும் அங்கு சென்று வேலை செய்து கொண்டிருந்தேன். நான் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிரி அஞ்சலிதேவி என்னிடம் வந்து என்னுடைய கொளுந்தனார் குடோனை யார் திருந்தார்கள் என்று என்னிடம் கேட்டார். யார் திறந்தார்கள் என்று தெரியவில்லை ஓனர் கலைமணியை கேட்டால் தான் தெரியும் என்று சொன்னேன். நான் அவரை கூப்பிடுவதற்கு திரும்பும் போது என்னை எதிரிகள் பிரபு ,அஞ்சலிதேவி, பிரகாஷ் , சேகர் ஆகிய 4பேரும் சேர்ந்து எனது வலது கையில் அடித்தார்கள். எதால் அடித்தார்கள் என்று தெரியவில்லை. கையில் இரத்தம் வந்தது. நெஞ்சில் காலால் எட்டி உதைத்தார்கள். மேலும் என்னை கெட்டவார்த்தைகளால் திட்டினார்கள். நான் மருத்துவமனைக்கு செல்வதற்காக பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு இருந்த எதிரிகள் பிரபு. பிரகாஷ், சேகர் ஆகியோர்கள் அங்கு நின்றுகொண்டு என்னை மருத்துவமனைக்கு செல்லவிடாமல் 'ஓடிவிடு உன்னை அடித்து கொன்றுவிடுவோம்' என்று மிரட்டினார்கள். நான் அடுத்தநாள்

ஈரோடு டி.பி.என் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீஸாரர் அங்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றுசென்றனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

தற்போது சாட்சியம் அளித்தபடிதான் போலீஸார் என்னை விசாரணை செய்தபோது சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். புகார் வாக்குமூலத்தில் உள்ள அடித்தல் திருத்தல்கள் நான் கையொப்பம் செய்தபோது இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரிகளை எனக்கு எத்தனை வருடங்களாக எனக்குத் தெரியும் என்றால் இந்த சம்பவத்திற்கு முன்னர் சுமார் 2 அல்லது 3 ஆண்டுகளாக தெரியும். 3ம் எதிரி பிரகாஷ்-ம் நானும் மேற்படி டபுலிங் மில்லில் ஒன்றாக வேலைசெய்தோம் என்றால் சரிதான். 3ம் எதிரி பிரகாஷ் என்பருக்கும், அன்பழகன் என்பவருக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை சம்பந்தமாக 3ம் எதிரி பிரகாஷ் நீதிமன்றத்தில் நொடிப்புநிலை அடைந்துவிட்டதாக மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மருத்துவரிடம் சம்பவம் குறித்து கூறினேனா என்றால் கூறினேன். மருத்துவரிடம் எத்தனை நபர்கள் என்னை தாக்கியதாக கூறினேன் என்றால் 4 நபர்கள் தாக்கினார்கள் என்று கூறினேன். இவ்வழக்கில் மற்ற சாட்சிகளான அன்பழகன், முத்துசாமி, கலைமணி, பாலாஜி, தியாகராஜன், சுப்பிரமணி, முத்துசாமி ஆகியோர்கள் எனது நண்பர்கள் என்றால் அன்பழகன் மட்டும் நண்பர் மற்றவர்கள் அருகில் இருப்பவர்கள் தெரிந்தவர்கள். எதிரிகள் பவானி மருத்துவமனையில் வைத்து என்னை மிரட்டியதாக கூறியுள்ள நிலையில் அது சம்பந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவத்தன்றே 1ம் எதிரி பவானி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை பெற்ற விவரம் எனக்கு அன்றைய தினமே தெரியுமா என்றால் தெரியும். 1ம் எதிரி கொடுத்த புகாரில் என் மீது வழக்கு தாக்கல் செய்து விடுவார்கள் என்று முன் எச்சரிக்கையாக வழக்கில் இருந்த தப்பிப்பதற்காக இந்த பொய்யான புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எனக்கு வேறுவகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் அன்றைய தினமே மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றும் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.

## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : STC No. 264/2017 | **Date** | : 09.06.2025 |
| **Deposition of Witness for** | : அ.சா.2 | **Taluk** | : |
| **Name** | : அன்பழகன் | **Calling** | : |
| **Father Name** | : மாரிமுத்து | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.06.2025**

(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர் ).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் சித்தோடு ஆவின் டைரியில் குடியிருந்து பஸ்கம்பெனியில் மேனேஜராக வேலைசெய்து வருகின்றேன். அ.சா.1 வரதராஜன் எனக்குத் தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர் என்னுடைய முதலாளியின் தறிப்பட்டறையில் வேலை செய்து வந்தார். 29.06.2015ம் தேதி 4.00 - 4.30 மணியளவில் பாலாஜி குடோனிற்கு எதிர் புறத்தில் உள்ள ஐயங்கார் பேக்கரியில் டீ குடிப்பதற்காக நான் சென்றிருந்தேன். அப்போது பிரகாஷ்-ன் குடும்பத்தார் வரதராஜன் குடும்பத்தார், ஐயாசாமி குடும்பத்தார் ஆகியோரிடையே சண்டை நடந்துகொண்டிருந்தது. ஐயாசாமி மற்றும் பிரகாஷ் குடும்பத்தார் வரதராஜை பார்த்து தகாத வார்த்தையால் திட்டினார்கள். ஆஜர் எதிரிகள் வரதராஜை கையால் அடித்தார்கள். நானும் முத்துசாமியும் தடுத்தபோது எங்களையும் தகாத வார்தையால் பேசினார்கள். வரதராஜை வீட்டிற்கும் தொட்டிக்கும் இடையே உள்ள சந்தில் வைத்து ஆஜர் எதிரிகள் அடித்தார்கள். நாங்கள் சமாதானம் செய்தும் கேட்டகாததால் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

தற்போது சாட்சியம் அளித்துள்ளபடிதான் போலீஸார் என்னை விசாரித்தபோதும் சொன்னேனா என்றால் ஆமாம். எனக்கும் 3ம் எதிரி பிரகாஷ்க்கும் கொடுக்கல் வாங்கல்

பிரச்சனை ஏற்பட்டு அது சம்பந்தமாக 3ம் எதிரி என்மீது நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சம்பவம் குறிப்பாக எங்கு நடந்தது என்றால் பாலாஜி குடோனில் வாசற்படியில் நடந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அருகில் இருந்தோர்கள் சண்டையை தடுக்க வந்தார்களா என்றால் சுமார் 10 பேர் இருந்தார்கள். அப்போதே போலீஸ்-க்கு தகவல் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. எத்தனை நபர்கள் வரதராஜை தாக்கினார்கள் என்றால் சுமார் 9 முதல் 12 நபர்கள் தாக்கினார்கள். மேற்படி சங்கதியை போலீஸாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அ.சா.1 வரதராஜன் எனது நண்பரா என்றால் ஆமாம். நான் உண்மையில் அந்த இடத்தில் இருந்திருந்தால் வரதராஜனை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றிருப்பேன் என்றும் நான் அந்த இடத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பாலாஜி குடோனிற்கு எதிரே எந்த பேக்கரியும் இல்லை என்றால் சரியல்ல இருந்தது தற்போது இல்லை. நான் எந்த கம்பெனியில் வேலை செய்கிறேன் என்றால் புஷ்பராஜ் பஸ் சர்வீஸ். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் வரதராஜன் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.